**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை - 2020**

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக் கொண்டேன்.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

---

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

---

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்று நிறுவகத்தினால் பராமரித்துச் செல்லல் அவசியமாகவுள்ளது

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்க்ளுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இல் குறிப்பிடப்பட்ட நியதிகளின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்படும் சொத்துக்கள் வகுப்புக்குரிய சகல சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் முன்னைய ஆண்டின் இறுதியில் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் பயன்படுத்தப்பட்டு வந்த ரூபா 83,230,824 கிரயத்திலான 04 ஆண்டுகளுக்குரிய 422 சொத்து உருப்படிகள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. அதில் உருவாகியிருந்த மீள் மதிப்பீட்டு இலாபமும் சீராக்கப்பட்டு சொத்துக்கள் வருடாந்த பெறுமானத்தேய்வு செலவினமான ரூபா 30,943,048 தொகை அரசிடமிருந்து கிடைத்த மூலதன மானியக் கணக்கிற்கு சீராக்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் இறுதியில் மூலதன மானியக் கணக்கின் மீதி ரூபா 4,338,513 ஆன அசாதாரண மறைபெறுமதி யொன்று நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் மொத்த செலவின அளவின (பெறுமானத்தேய்வு அளவு) சமர்ப்பிக்கும் நோக்கில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமானத்தேய்வு அளவும் நிதிச் செயலாற்றல் கூற்றில் பதிவுசெய்யப்பட்டதுடன் அதன் பிரகாரம் பிற்போடப்பட்ட வருமானத்திற்கு அந்தளவு சீராக்கம் செய்தல் அதிகார சபையின் கொள்கையாக செயற்படுத்தப்பட்டது. இது கணக்கீட்டுக் பதிவொன்றில் விபரமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக கணக்காய்வின் எதிர்ப்பொன்று தெரிவிக்காமை காரணமாக அம்முறைமை தொடர்ந்து பின்பற்றது. அரச கணக்காய்வினால் இம்முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நடைமுறையின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் சீராக்கம் 2021 இறுதிக் கணக்குடன் சமர்ப்பிக்கின்றேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இல் குறிப்பிடப்பட்ட நியதிகளின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் உரிய கணக்குகளை சீராக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | அதிகாரசபையால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் 2020 முதல் 2022 மூன்றாண்டு | 2020 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்த போதும் கணக்காய்வில் சுட்டிக் | சுற்றறிக்கை பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட |

| | | |
|---|---|---|
| காலஎல்லைக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | காண்பிக்கப்பட்ட பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 3,927,000 தொகையான பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 74,270,000 ஆக இருந்தமை ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 78,197,000 ஆன வீழ்சசியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டில் திறைசேரியினால் மீண்டெழும் பெறுவனவுகள் ரூபா 25,679,000 ஆலும் தண்டப்பண வருமானம் ரூபா 17,268,000 ஆல் குறைவடைந்திருந்தமை மற்றும் தனிப்பட்ட சம்பளங்கள் 20,570,000 ஆலும் நடுவர் தீர்ப்பு செலவினம் ரூபா 22,163,000 அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் திருத்த வேலைகள் 2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன். மீளாய்வாண்டு வரை 16 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் சட்டத் திருத்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 மே மாதம் வரை இறுதி வரைவு மீளாய்விற்குரிய குழுவினால் கூட்டங்கள் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளன. அத்தோடு இராஜாங்க அமைச்சருடனும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. புதிய அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை விஞ்ஞாபன வரைவு தயாரிக்கப்பட்டு அமைச்சின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. | சட்ட திருத்தங்கள் உரிய காலப் பகுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 யூலை 29 ஆந் திகதிய 2186/17 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் ஆய்வுகூட பரிசோதனைக்காக விலைக் கட்டுப்பாடு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் அவ்விலைக் கட்டுப்பாடு பாவனையாளர்களுக்கு இடையே சென்றடைந்தமைக்காக பரீட்சிப்பதற்கு எவ்வித சுற்றி வளைப்பொன்று பாவனையளர் அதிகாரசபையால் | அநேகமான ஆய்வுகூட கட்டுப்பாட்டு விலை அறவிடப்பட்டிருந்ததுடன் கூடுதலாக அறவிடப்பட்டு ஒரு இராசாயன ஆய்வுகூடம் தொடர்பாக சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (வழக்கு இலக்கம் 2021/84 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.) | ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைகளில் விலை தொடர்பாக சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருக்கிவல்லை. | அது தொடர்பாக எதிர்வரும் ஆண்டில் வழக்கு தொடர் உள்ளது. எதிர்காலத்தில் ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைகளில் விலை தொடர்பாக கூடுதலான கவனமொன்றை செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாவட்டங்களையும் அறிவூட்வூதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (ஆ) 2020 ஆம் ஆண்டின் போது நீதவான் நீதிமன்றங்கள் அனுப்பிய அபராதத் தொகையில், ரூபா 7,676,874 பெறுமதியான 154 காசோலைகள் காலாவதியானதால் நீதிமன்றத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. நீதவான் நீதிமன்றத்தால் காசோலைகள் வழங்கப்பட்ட திகதிக்கும் அக்காசோலைகளை நீதிமன்றத்திற்கு அனுப்பிய திகதிக்கும் இடையில் சுமார் 45 நாட்கள் கால அவகாசம் இருந்ததால், காசோலைகளை மாற்றிக் கொள்வதற்கு போதுமான கால அவகாசம் இருந்த போதும், ஆனால் அதிகாரசபை அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த ஆண்டு (2020) நாட்டில் ஏற்பட்ட கோவிட் தொற்றுநோய் காரணமாக, தபால் நிலையங்கள் மூடப்பட்டமை அந்த பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டதாலும், ஊழியர்களை அழைத்து வருவதில் இருந்த தடையாலும், இவ்வாறான அளவு காசோலைகள் காலாவதியானமையால் காலநீடிப்பிற்காக மீண்டும் நீதிமன்றங்களுக்கு அனுப்ப வேண்டியிருந்தது. | காசோலைகளை திருப்பி அனுப்பும் செயற்பாட்டினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 2015 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை அதிகாரசபையின் சட்டப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட 1556 முறைப்பாடுகளில் 678 முறைப்பாடுகளுக்கு 2020 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் தீர்வு வழங்கப்பட்டிருந்ததுடன் 166 முறைப் பாடுகள் நீக்கப்பட்டிருந்தன. 256 முறைப்பாடுகள் தொடர்பாக புலனாய்வு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படா திருந்ததுடன் 456 முறைப்பாடுகளுக்கு அழைப்பு விடப்பட இருந்தன. இந்த 456 முறைப்பாடுகளில் 175 முறைப்பாடுகள் 2018 ஆம் ஆண்டின் போது புலனாய்வு செயற்பாடுகளுக்காக அனுப்பி முறைப்பாடுகளாகும். மீளாய்வாண்டின் போது புலனாய்வு செயற்பாடுகளுக்காக அனுப்பிய 80 முறைப்பாடுகளில் 04 மாத்திரம் தீர்வு செய்யப்பட்டிருந்ததுடன் 74 முறைப்பாடுகளுக்காக கோரல் மேற்கொள்ளப்படவில்லை. | 2015 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சட்டப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட 1556 முறைப்பாடுகளில் 524 முறைப்பாடுகளுக்கு 2020.12.31 ஆந் திகதி வரை தீர்வு வழங்கப்பட்டிருந்த துடன் 166 முறைப்பாடுகள் நீக்கப்பட்டிருந்தன. 410 முறைப்பாடுகள் தொடர்பாக புலனாய்வு செயற்பாடு முடிவடையாமல் இருந்ததுடன் 456 முறைப்பாடுகளுக்கு கோருவதற்கு இருந்தன. இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட இருந்த 456 முறைப்பாடுகளில் 175 முறைப்பாடுகள் 2018 ஆம் ஆண்டின் போது புலனாய்வு செயற்பாடு களுக்காக அனுப்பி முறைப்பாடுகளாகும். மீளாய்வாண்டின் போது | நுகர்வோர் முறைப்பாடுகள் புலனாய்வு நடவடிக்கைகள் விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | புலனாய்வு செயற்பாடு களுக்காக அனுப்பிய 80 முறைப்பாடுகளில் 04 மாத்திரம் தீர்வு செய்யப்பட்டிருந்ததுடன் 74 முறைப்பாடுகளுக்காக கோரல் மேற்கொள்ளப்படவில்லை. | |
| (ஈ) | பாவனையாளர்களுக்கு துரிதமாக சந்தை விலைகளை அறிந்து கொள்வதற்கும் விரைவாக முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக 1977 ஆம் இலக்க தொலைபேசி சேவை 2013 ஆம் ஆண்டின் போது நிறுவப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 9,188,396 தொகை செலவினமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. துரித அழைப்பு சலுகை சேவைக்கு 2020 ஆண்டு மார்ச் முதல் திசெம்பர் வரை 5,104 பொதுமக்கள் முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை 3790 முறைப்பாடுகளுக்காக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் 10 காலப்பகுதிக்காக கிடைத்த முறைப்பாடுகளில் 74 சதவீதத்திற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>அதிகாரசபையால் மீளாய்வாண்டின் சனவரி, பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களுக்குரிய தரவு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையில் இக்கடமை நிறைவேற்றப்பட்டதுடன் 1977 முறைப்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மாதாந்தம் அறிக்கை யொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் அதன் பிரகாரம் இச்செயற் பாட்டினை நன்றாக மேற்பார்வை செய்து மாதாந்தம் கிடைத்த முறைப்பாடுகளில் குறைந்தது 80% ஆன அளவொன்றுக்காக நடவடிக்கை எடுப்பேன். அதற்காக எழுத்து மூல ஆலோசணை வழிகாட்டலொன்றை அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். 2021 ஆம் ஆண்டின் போது இக்கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் சீர்செய்து பாவனையாளருக்கு சிறந்த சேவையொன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பேன். | நுகர்வோர் முறைப்பாடுகள் புலனாய்வு விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் அதிகாரசபையினால் 15,923 சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 24,061 ஆன சுற்றி வளைப்புகளுக்கு ஒப்பாக 34 சதவீத வீழ்ச்சியொன்றாகும் மேலும் 2019 ஆம் ஆண்டின் போது தண்டப்பணமாக ரூபா 39,094,340 ஆன | 2020 ஆம் ஆண்டிற்காக 26,004 சுற்றி வளைப்புக்களை மேற்கொள்ள ஆண்டின் போது திட்டமடப்பட்டிருந்த போதும் கொவிட் தொற்று நிலைமை மார்ச் மாதத்தில் பரவியமை காரணமாக | சுற்றி வளைப்பு இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அது ரூபா 21,826,267 வரை அதாவது 44 சதவீதமான வீழ்ச்சியொன்றாகும். | வெளிக்கள கடமை முறையாக மேற்கொள்ள முடியாமையால் உள்ளவாறான சுற்றி வளைப்புக்கள் 15,923 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே சுற்றிவளைப்புகளுக்கான தண்டப்பணத்தை தீர்மானித்தல் பாவனையாளர் அதிகாரசபைக்கு புறம்பாக இடம்பெறும் நடவடிக்கை ஒன்றாக இருப்பதால் கொவிட் தொற்று நிலைமையால் சில பிரதேசங்கள் மூடப்பட்டமை நீதிமன்ற செயற்பாடுகள் மட்டுப்பத்தப்பட்டமையால் நீதிமன்ற வழக்கு தொடரல் 2020 ஆம் ஆண்டில் குறைவடைந்தமையால் அண்டப்பணத்தின் பெறுமதி குறைவடைந்தமைக்கு காரணமாக இருந்தன. | |
| (ஊ) | சரியான தரத்துடனான பொருட்கள் நுகர்வோருக்கு இனங்காணக்கூடிய வகையில் நடைமுறையொன்றைத் தயாரிக்கும் நோக்கில் 2014 சனவரி 24 ஆந் திகதி ' நறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் குறித்த நிறுவனம் உடன்படிக்கை பிரகாரம் செயற்படாததன் பேரில் 2018 ஆம் ஆண்டில் சர்வதேச வர்த்தக சபைக்கு இது தொடர்பாக நடுவர் தீர்ப்பிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.<br>CAA/L&E/20/2020 ஆம் பணிப்பாளர் சபை பத்திரத்தின் பிரகாரம் இவ்வழக்கு நடவடிக்கை தொடர்பாக அதிகாரசபை நிதியத்திலிருந்து ரூபா 55 மில்லியன் வரை செலவினத்தை தீர்வு செய்வதற்காக அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்தது. 2003 இன் 09 ஆம் பணிக்கொடை நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரசபையின் 49(3) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிதியத்திலிருந்து செலுத்தக்கூடிய தொடர்பான நியதிகள் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அந்நியதிகளை மிகைத்து சென்று மீளாய்வாண்டில் ரூபா 55 மில்லியனான மீளளிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த | SICPA Security Solutions SA நிறுவனம் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் தொடர்பான அதிகார சபைக்கு இடைப்பட்டிருந்த 2014.01.24 ஆந் திகதி ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை முறையான வகையில் செயற்படாததன் அடிப்படையில் SICPA SA நிறுவகத்தினால் தீர்ப்பாளர் வழக்கு சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தில் (International Court of Arbitration of the International Coommerce) இந்த நிறுவனத்தினால் நடுவர் தீர்ப்பு வழக்கு செயற்பாடு 2 கட்டத்தில் காணப்பட்டதுடன் அதன் இரண்டாம் கட்டமாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் துறைசார் கட்டணங்கள் ரூபா 3,950,000/- என சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முன்னராக குறிப்பிடப்பட்டிருந்தமையால் | சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரத்தின் பேரில் மேற்படி தீர்ப்பாளர் தொடர்பாக ரூபா 22,162,690 ஆன செலவினமொன்று நிதியத்தினால் 2020 யூலை முதல் திசெம்பர் வரை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தீர்ப்பாளர் வழக்கு செயற்பாடுகளுக்காக ரூபா 22,162,890 தொகை செலவிடுவதற்கு இருந்தது. எனினும் 2021.03.22 ஆந் திகதிய சட்டமா அதிபரால் அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் இரண்டாம் கட்டத்திற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் துறைசார் கட்டணம் ரூபா 1,247,000 என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட நடுவர் தீர்ப்பிற்காக இதுவரை ரூபா 19,763,982 தொகை அதிகாரசபையினால் செலவிடப்பட்டிருந்தது. | |
| (எ) | 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் 60 (6) பிரிவின் பிரகாரம் முன்னைய தவறுகள் பலதடவை ஏற்படுவதற்கு முன்னர் குற்றவாளியாக இருந்தால் மற்றும் முகவரிகள் அதிகாரசபை பொத்தமானதென கருதும் வகையில் ஏதேனும் வகையில் வெளியிடப்பட்டு பாவனையாளர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் சுட்டிக் காண்பித்த 2021 ஆம் ஆண்டிலிருந்து அதிகாரசபையின் இணையத்தளத்தில் இத்தகவல்களை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் 61 (3) பிரிவின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் பரீட்சிக்கப்பட்ட 299 மாதிரிகளுக்கு இடையே 112 மாதிரிகள் நிர்ணயிக்கப்பட்ட தரத்திலும் விதந்துரைகள் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டிருக்கையில் தெரிவு நிர்ணயிக்கப்பட்ட தரத்திலும் விதந்துரைகள் இல்லாத பொருட்களை தடைசெய்து தடுத்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் பரீட்சிக்கப்பட்ட 299 மாதிரியில் 165 தொடர்பாக பாதகமான பெறுபேறுகள் கிடைத்துள்ளன. பாதகமான பெறுபேறுகளுடன் கூடிய மாதிரிகள் அனைத்தும் நிர்ணயிக்கப்பட்ட விதந்துரைகள் இல்லையென குறிப்பிட முடியாது. சில மாதிரிகள் பல்வேறு முறைப்பாடுகள் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டு பரீட்சிக்கப்பட்டிருந்தது. அதன் போது தரப் பரிசோதனை மேற் கொள்ளாத சந்தர்ப்பமும் இருக்கலாம் | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிர் 667 ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணியினர் 531 ஆக இருந்தமையால் வெற்றிடங்கள் 136 ஆக இருந்தன. 2020 ஆம் ஆண்டில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அவ்வப்போது பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுவதற்காக ரூபா 831,222 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2021 பெப்ரவரி 22 ஆந் திகதி வரை 3 வெற்றிடங்களை மாத்திரம் நிரப்புவதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அத்தோடு ஒழுக்காற்று நடவடிக்கைகளின் பேரில் சம்பளம் இடைநிறுத்தம், வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் உரிய திகதியில் சித்தியடையாமை போன்ற குறைபாடு காணப்படுகையில் 2019 ஒக்தோபர் 01 ஆந் திகதி 04 சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர்களுக்காக நியமனம் வழங்கப்பட்டிருந்ததுடன் மேலதிக / தொழில் தகைமைக்காக வழங்கப்பட்ட புள்ளிகளின் அளவு தொடர்பாக நியதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 136 வெற்றிடங்களில் 82 வெற்றிடங்கள் புலனாய்வ உத்தியோகத்தர்களுக்கானது. எனினும் 2018 ஆம் ஆண்டின் போது பதவியணியினர் தேவைப்பாடு நியாயப்படுத்தாமல் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 207 புலனாய்வு உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். புலனாய்வு உத்தியோகத்தர்கள் தேவையான அளவில் இருப்பதால் புலனாய்வு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்ய வேண்டியதில்லை. ஆட்சேர்ப்பிற்காக பத்திரிகை விளம்பரம் 10 பதவிகளுக்காக செய்யப்பட்டிருந்தது. அதில் 04 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு நடைபெற்றுள்ளது. இந்த 04 உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கிய விதம் தொடர்பாக ஆரம்ப விசாரணையொன்றை நடாத்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. | சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர்களுக்காக நியமனம் தொடர்பாக புலனாய்வு செயற்பாடுகளை விலைவில் பூர்த்தி செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |